[2013 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

திருமதி ர. சுபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 95, பேளூர் ஊராட்சிப் பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, 95, பேளூர் ஊராட்சிப் பொதுமக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 299, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

299—

குளிர்பதனக் கிடங்கு

***27898—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் பகுதியில் வேளாண் விளை பொருட்களுக்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 2012-2013 ஆம் நிதியாண்டில் ஒப்பளிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கட்டுமானப் பணிகள் விரைவில் முடியவிருக்கின்றன. எனவே, கட்டுமானப் பணிகள் முடிவுற்றபின், விவசாயிகள் குளிர்பதனக் கிடங்கினைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* The Tamil Nadu Chief Minister is having physical strength, mental strength and spiritual strength, *அதாவது, மூன்று வலிமைகளையும் பெற்ற ஒரே முதலமைச்சர் தமிழ்நாடு முதலமைச்சர் என்று அறிஞர் பெருமக்களால் பாராட்டப்படுகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்" என்ற கூற்றிற்கிணங்க, இந்த வினா எழுவதற்கு முன்னமே அந்தியூரில் குளிர்பதனக் கிடங்கு அமைத்துக் கொடுக்க உத்தரவு வழங்கிய, ஈடு இணையற்ற முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள பர்கூர் மலைப் பகுதியானது 30-க்கும் மேற்பட்ட கிராமங்களைக் கொண்ட பகுதி. இங்கு மலைவாழ் மக்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கின்றனர். இவர்கள் அனைவரும் விவசாயத்தையே தொழிலாகக் கொண்டுள்ளனர். மேலும், குட்டையூர் மற்றும் வேளாண்பட்டி போன்ற பல கிராமங்கள் கர்நாடகா எல்லைப் பகுதியில் அமைந்துள்ளன. எனவே, இம்மலைவாழ் மக்கள் தாங்கள் விளைவித்த விவசாயப் பொருட்களையும், மலைப் பகுதியில் சேகரிக்கும் பொருட்களையும் சேமித்து வைக்கின்ற வகையில், பர்கூர் மலைப் பகுதியில் ஒரு குளிர்பதனக் கிடங்கை அமைத்துக் கொடுக்க, விவசாயத் துறையிலே பயனுள்ள திட்டங்களையெல்லாம் கொடுத்து, இரண்டாவது பசுமைப் புரட்சியை உருவாக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் வட்டாரத்தைப் பொறுத்தவரையிலே, காய்கறிகள் மற்றும் பழங்கள் 664 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகின்றன. அந்தியூரிலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கோபிசெட்டிபாளையத்தில்கூட 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவிலே குளிர்பதன வசதி கொண்ட கிடங்கும், வணிக வளாகமும் அமைக்கப்பட்டு வருகின்றன. சத்தியமங்கலத்திலும் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வருகிறது. அப்பணிகள் தற்போது முடிவடையும் நிலையில் இருக்கின்றன. பணிகள் முடிவடைந்தவுடன், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட பகுதியில் இருக்கின்ற விவசாயிகள் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அதைவிட அதிகமாக தேவை இருப்பின், அதுபற்றி ஆராய்ந்து பின்னர் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், என்னுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படுமென்று சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகின்றேன்.

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

1—

மகளிர் உயர்நிலைப் பள்ளி

***34798—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—